சிவாச்சாரியாரின்



# அருள்ஜோதி

சமய சஞ்சிகை



ஆசிரியர்

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துமத குருப்பீடாதிபதி
சிவாகம ஞானி
சிவாச்சார்ய சிம்மம்

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
### அவர்களின் ஞாபகார்த்தமாக

**சிவாச்சாரியாரின்............**

# அருள் ஜோதி

எனும் ஆன்மீக இதழ் வெளிவருகிறது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.



**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி**

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

## சர்வதேச இந்துமத குருபீடம்
### அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்
(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
**46, 7வது லேன், (புளூமென்டோல் வீதி),**
**கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**
**தொலைபேசி: 2393436, 0722-422239**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்

# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 09 பங்குனி, சித்திரை 2006 ஜோதி-81

ஆசிரியர்: கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்

- ஆசியுரை
- தீராத துன்பங்கள் தீர்த்துவைக்கும் பிரதோக்ஷ விரத வழிபாடு
- மாணவர் பகுதி
- மாணிக்கவாசகர் தந்த மாணிக்கம்
- கர்ம காண்டமும் ஞான காண்டமும்
- சபரிமலை யாத்திரை ஐயப்பன் வழிபாடு
- பெண்ணின் பெருமை
- ஔவையின் அருள்வாக்கு
- சித்திரை மாத விஷேசம்
- ஞானாமிர்தம் வினா விடை

**சர்வதேச இந்துமத குருபீடம்**

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

46, 7வது லேன், (புளூமென்டோல் வீதி), கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

தொலைபேசி, தொலைநகல்: 2393436, 0722-422239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியார்

(சர்வதேச இந்துமத குருபீடம் - லண்டன்)

அவர்களின்

# அருளாசிச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் தலைநகரான கொழும்பு மாநகரில் பரந்து வாழும் இந்து மக்களுக்கு அரும்பணியாற்றி வரும் சர்வதேச இந்து மத குருபீடம், இலங்கைத் திருநாட்டில் மட்டுமல்லாமல் சுவிஸ், ஜேர்மன், லண்டன், கனடா போன்ற உலக நாடுகளில் வாழும் இந்து மக்களின் சமய சமூக கலைச் சேவைகளைப் பாராட்டி சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்து வருகிறது.

கடந்த ஆண்டு லண்டன் மாநகரில் சர்வதேச இந்து மத குருபீடம் ஆன்மீகப் பெருவிழாவை நடாத்தியமையும், 2003ம் ஆண்டு ஜேர்மன் மாநகரில் ஆன்மீகப் பெருவிழாவில் 75 பல்துறை பிரமுகர்கள் பாராட்டி பட்டமளித்து கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 2005ம் ஆண்டு சுவிஸ் மாநகர் அடிஸ்வில் முருகன் ஆலயத்திலும், ஆன்மீகப் பெருவிழா நடாத்தப்பட்டு சமய, சமூக, கலைப் பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதுமட்டுமல்லாமல் கடந்த 23 ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் அகில இலங்கை ரீதியாக சமய-இலக்கிய அறிவுப் போட்டியினை நடாத்தி சிறப்பான பரிசில்கள் வழங்கி வருவதும் பாராட்டுக்குரியது.

இந்த ஆண்டு மே மாதத்தில் இலங்கையில் பலபாகங்களிலும் ஆன்மீகப் பெருவிழா நடாத்தப்பட்டு பல்துறை பிரமுகர்கள் கௌரவப் பட்டம் பெறுவதுடன் மாணவர்களுக்கான சமய இலக்கிய அறிவுப் போட்டி நடாத்தி பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை மனநிறைவைத் தருகிறது.

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினதும், சர்வதேச இந்துமத குருபீடத்தினதும் சமய, சமூகப்பணி சிறக்க எமது குருநாதர் திருவடிகளை வணங்கி அருளாசிகளை வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகிறோம்.

-- சுபம் --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீராத துன்பங்கள் தீர்த்துவைக்கும் பிரதோஷ விரத வழிபாடு

பிரதோஷ பூஜை செய்பவர்கள், அஷ்ட ஐஸ்வர்யங்களையும், சகல சௌபாக்கியங்களையும் பெறுவார்கள். ஒரு நாள் பிரதோஷம் பார்ப்பது பதினைந்து நாள் கோயிலுக்குச் சென்று வந்த பலன் கிடைப்பதும், பதினொரு பிரதோஷங்கள் பார்ப்பது ஒரு கும்பாபிஷேகத்தைக் கண்ட பலனைக் கொடுப்பதும், நூற்றி இருபது ஸவேண்டினால் இறைவன் ஒரு சொல்லால் இவற்றை அருள்வான்.

இந்தச் சுருக்கமான நெறியை அறியாத தேவர்கள் பிரம்மதேவனிடம் சென்று தங்கள் கருத்தை அறிவித்தார்கள்.

பிரம்மதேவர், தேவர்களுடன் திருமாலிடம் சென்று, "சாவா மூவா நலம் பெற என்ன வழி" என்று வினவினர்.

திருமால் "திருப்பாற்கடலைக் அடைந்து அமிர்தம் உண்டால் மரணமின்றி எப்போதும் இளமையுடன் வாழலாம்" என்று ஆலோசனை கூறினார்.

இந்திராதி தேவர்கள், திருப்பாற்கடலை அடைந்து பாற்கடலைக் கடைய முயன்றார்கள். மந்திரகிரியை மத்தாகவும், வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாகவும் அமைத்தார்கள்.

திருமால் கூர்மமாகி மந்திரகிரியைத் தம் முதுகில் தாங்கினார். அசுரர்கள் வாசுகியின் தலைப்புறமும், தேவர்கள் வால்புறமும் நின்று கடையலானார்கள்.

அந்த நாள் தசம திதி. அன்று ஒரு வேளையுண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மறுநாள் ஏகாதசி பதினோராவது திதி.

பாற்கடலைகடைந்தபோது, வாசுகி வருத்தம் தாங்காமல் பதைபதைத்து நஞ்சை உமிழ்ந்தது: கடலிலிருந்தும் நஞ்சு தோன்றியது.

வாசுகி கக்கிய ஆலமும், கடலின் ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் என்ற பெயர் பெற்றது.

இந்த ஆலாலம் மிக்க பயங்கரமாக வெப்பத்துடன் உலகத்துக்கே முடிவு செய்வதுபோல் விண்ணவரை விரட்டிட, வலமாகவும், இடமாகவும் மறித்துத் துரத்தியது: திசைதோறும் தேவர்கள் நடுங்கி நடுங்கி ஓடினார்கள்.

வெண்ணிறமாக இருந்த விஷ்ணு மூர்த்தி விஷ வேகத்தால் நீல நிறம் ஆனார். வானவர்கள் அஞ்சி அரனாரிடம் சென்று அடைக்கலம் புகுந்தார்கள்.

தஞ்சம் புகுந்த வானவர்கள் "தேவ! தேவ! மகாதேவா! அருட்பெருங் கடலே! கருணைக்குன்றே! தேவரீர் ஆண்டான், நாங்கள் அடிமைகள்: நாங்கள் பாற்கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைந்தோம். அந்த விவசாயத்தில் முதலில் விளைந்தது தேவரீருக்கு உரியது." என்று முறையிட்டார்கள்.

கருணையே வடிவான கண்ணுதற் கடவுள் தமது அருகிலிருந்த சுந்தரரைப் பார்த்து "சுந்தரா! அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொண்டு வா" என்று பணித்தருளினார்.

சுந்தரர் மாலயனாதி வானவர்களால் அணுகமுடியாத அதிபயங்கரமான கொடிய விஷத்தை நாவல்பழம் போலத்திரட்டி உருட்டிக் கொணர்ந்து சிவபெருமானிடம் தந்தார்.

இறைவன் அந்தக் கொடிய விஷத்தை அடியவர்களான அமரர்கள் உய்ய அமுதம் போல் உண்டருளினார். அந்த விஷம் உள்ளே சென்றால் உள்முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்து விடும். உமிழ்ந்தால் வெளிமுகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்து விடும். ஆதலால் உண்ணாமலும், உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளினார். அதனால் எம்பெருமானுடைய செம்மேனி கண்டங்கரியதாக ஆயிற்று. அது காரணமாக அவர் திருநீலகண்டர் என்று பெயர் பெற்றார்.

சிவபெருமானுடைய கருணைக்கு உதாரணம் இது ஒன்று போதாதா? எம்பெருமான் நஞ்சுண்டருளிய கருணைத்திறத்தை நால்வர்களும் மற்றைய ஆன்றோர்களும் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

இறைவன் ஆலகால விஷத்தை உண்ணவில்லையானால் பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் அன்றே மாண்டிருப்பார்கள். எல்லோருடைய கண்டத்தையும் எந்தைபிரான் கண்டம் தீர்த்தது.

இந்த விஷத்தின் வெம்மையால் திருமால் நீலநிறம் பெற்றார். அதற்கு முன்பு அவர் வெண்மை நிறத்துடன் இருந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரமாகும்.

சிவபெருமான் தேவர்களை நோக்கி மீண்டும் சென்று திருப்பாற் கடலைக் கடையுமாறு பணித்தருளினார். அவ்வாறே அமரர்களும் அசுரர்களும் மீண்டும் திருப்பாற் கடலருகில் சென்று நின்று முன்போலவே கடலைக் கடையத் தொடங்கினார்கள்.

பாற்கடலிலிருந்து லஷ்மி, ஐராவதம், காமதேனு, கற்பகதரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்சவரம் என்ற குதிரை முதலியன ஒவ்வொன்றாகத் தோன்றின. லஷ்மியைத் திருமால் ஏற்றுக்கொண்டார். ஏனைய பொருட்களை இந்திராதி தேவர்கள் அடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதசியாகிய அன்று இரவு முழுவதும் அவர்கள் உறக்கமின்றி பாற்கடலை கடைந்தார்கள். மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் தோன்றியது. அதனை தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அமிர்தம் உண்ட அமரர்கள் அந்த மகிழ்ச்சியினால் துவாதசியன்று ஆடியும், பாடியும் பொழுதைப் போக்கினார்கள்.

மறுநாள் திரியோதசி பதின்மூன்றாம் நாள், தேவர்கள் சிவபெருமானை வணங்காமல் பொழுது போக்கிய தங்கள் குற்றத்தை உணர்ந்து, சிவபெருமானிடம் சென்று பணிந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டினார்கள்,

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள்புரியத் திருவுளம் கொண்டு கயிலையில் அன்றுமாலை (4.30 மணி முதல் 6.00 மணி வரை) பிரதோஷ வேளையில் தம் திருமுன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று அம்பிகை காணத் திருநடனம் செய்தருளினார், தேவர்கள் அதனைத் தரிசித்து சிவபெருமானைத் துதி செய்து வணங்கினார்கள். அது முதல் திரியோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கலாயிற்று. (பிரதோஷம்-ரஜனி முக வேளை பாவத்தைப் போக்கும் நேரம்)

பிரதோஷம் என்ற விரதம் சிவமூர்த்திக்கு உரிய பலவித விரதங்களில் தலையாயது. இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் துன்பங்களிலிருந்து நீங்கி இன்பம் எய்துவார்கள்.

இறை வழிபாடு என்பது உலகில் அனைத்து மதங்களுக்கும் உயிர்நாடியாக விளங்கி வருகின்றது. நமது இந்து மதமும் இதற்கு விதிவிலக்கல்ல, இறைவழிபாடு, சடங்கு முதலியவற்றால் கிடைக்கப்பெற்ற ஒரு தெய்வீகக் கலைக் கூடமாய் நமது இந்து மதம் திகழ்கின்றது. "நம்பிக்கையுடன் இறைவனைத் தொழுதால் நம் உள்ளத்து ஆசைகள் நிச்சயம் நிறைவேறும்" எனும் ஆழ்ந்த கருத்தை உரைப்பது நமது மதம். இந்து மதத்தின் இறைவழிபாட்டில் தெய்வங்களுக்குக் குறைவில்லை. இறைவழிபாடு என்பது இன்னல் தீர்க்கும் நன்மருந்து என நம் முன்னோர்கள் நம்பினர். அவர்களின் அத்தகு நம்பிக்கையின் விளைவால் உதித்த வழிபாட்டு முறைகளில் ஒன்றே நாக வழிபாடு. பாம்பையும், பசுவையும், குதிரையையும் கூட இறைவழிபாட்டுக்கு பயன்படுத்துபவர்கள் இந்துக்களே.

"பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்பார்களே, அவ்வளவு கொடுமையான பாம்பினை எவ்வாறு தெய்வமாகக் கொள்ள முடியும்?, என அறியாமையில் உள்ளோர் வினவலாம், பாம்பினைத் தெய்வமாகத் தொழுது வழிபடுதலால் ஏற்படும் நன்மைகளை அறிந்துகொண்டால் அவர்களது இச்சந்தேகம் நீங்கிவிடும். மனிதனின் பசியைப் போக்கவல்ல உணவினை ஆக்கப் பயன்படுவது நெருப்பு. அதேசமயத்தில் ஊரையும் அழிக்கும் வலிமையுடைது. கவனத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகித்தால் அது நமக்கு நன்மை தரும். அதேபோல் நாகத்தை நாம் பணிவுடன் வணங்கி வேண்டி நின்றால் நமது வேண்டுதல் நிறைவேறும்.

உலகின் அனைத்து நாடுகளிலும் நாகம் வாழ்கின்றது. நெடுங்காலம் தொட்டு உலகில் வாழ்ந்துவரும் பிராணிகளில் இதுவும் ஒன்று. சூரியனை மையமாகக் கொண்டு இயற்கையை வணங்கி வந்த மக்கள் நாகத்தையும் வணங்கினர். இந்தியாவில் நெடுங்காலம் தொட்டே நாக வழிபாடு நடைபெற்று வந்ததற்கான தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. நாகரீகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் சிந்துவெளி நாகரீகக் காலத்தில் வாழ்ந்து வந்த மக்கள் நாக வழிபாடு நடத்தி வந்தனர். அவர்கள் பயன்படுத்தி வந்த முத்திரைகளில் நாகச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பௌத்த மதத்திலும், அதன் இலக்கியங்களிலும் நாக வழிபாட்டின் மேன்மைகள் உரைக்கப்பட்டுள்ளன. நாக வழிபாடு பல இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதோடல்லாமல் சிற்பங்களாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நாக வழிபாட்டின் மேன்மையை உணர்ந்த மக்கள் தாம் வணங்கும் தெய்வத்துடன் இணைத்து வணங்கலாயினர். இந்து மதத்தின் மூத்த முத்தேவர்களுடன் நாகம் கொண்டிருக்கும் தொடர்பை நாம் இப்போது அறியலாம்.

தேவர்களின் தலைவனும் உலகத்து உயிர்களையெல்லாம் காத்து வருபவனுமாகிய திருமால் பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பது பாம்பணையின் மீது அன்றோ.!

**நாக வழிபாடு**

ஆதிசேடன் என்னும் பெயர் கொண்ட அந்த நாகமே உலகத்தின் பாரத்தைச் சுமப்பதாக நம்பிக்கை உள்ளது. அதுமட்டுமல்லாமல் திருமால் இராவணனை அழிக்க இராமனாக இப்பூவுலகில் அவதரித்தபோது அவரது ஆருயிர் இளவல் இலட்சுமணனாக அவதரித்ததும் இந்நாகமேயாம்.

திருச்சிற்றம்பலத்தில் நடனமாடுபவனும், நாகாபரணன் எனும் பெயரைக் கொண்டவனுமான சிவன் தனது உடலில் அணிகலனாக அணிவது நாகங்களையே! உலகத்து உயிர்களை தோற்றுவிப்பவனான பிரம்மனின் மகனான காசிபனுக்கும் அவனது மனைவியான கத்ருவுக்கும் இடையே பிறந்த குழந்தையே நாகம் என்று புராணம் குறிப்பிடுகிறது. இந்திரபுரியில் கடும் விடத்தைக் கொண்டு விளங்கும் நாகம் பிறந்ததைக் கண்டு அஞ்சிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மன் அவைகள் வளர்வதற்கென தனியே ஓர் உலகினை அமைத்துக் கொடுத்தார். அதுவே "நாகலோகம்" எனப்பட்டது.

தேவர்கள் பாற்கடலைக் கடைய யத்தனித்தபோது அவர்களின் முயற்சிக்கு முழுவடிவம் கொடுக்கத் துணிந்ததும் ஒரு நாகமே. ஆம்! தேவர்கள் அந்த நாகத்தையே கயிறாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமுதம் கண்டனர். கிருஷ்ணன் காளிங்கன் எனும் நாகத்தின் மமதையை அடக்கப் புரிந்த காளிங்க நர்த்தனம் அனைவரும் அறிந்ததே! முழுமுதற் கடவுளாகிய விநாயகரின் இடுப்பில் உதிர பந்தமாக நாகம் விளங்குகிறது. பலராமன் சேச நாகத்தின் அவதாரம் என்பர். இவ்வாறு நாகத்தை தாம் வணங்கும் தெய்வங்களோடு இணைத்து வணங்கி மகிழ்ந்த நம் முன்னோர்கள் நாக வழிபாட்டைச் சிறப்புற நடத்த வேண்டுமென எண்ணி அதற்கென தனி நாள் ஒன்றையும் குறித்தனர்.

நாக வழிபாடு நடத்த சிறந்த நாள் நாக பஞ்சமியாகும். இது ஆவணி மாதத்தின் பூர்வ பட்சத்து ஐந்தாம் திதியன்று கொண்டாடப்படுகிறது. இந்நன்னாளில் நாம் நாகத்தை வழிபடுவோமேயானால் நமது தீமைகள் விலகி நன்மைகள் சேரும் எனும் நம்பிக்கை உள்ளது. "நாகபஞ்சமி" தோன்றியதற்கு கதை ஒன்று வழக்கில் உள்ளது.

ஒருமுறை விவசாயி ஒருவன் தனது நிலத்தைக் கலப்பை கொண்டு ஆழ உழுதுகொண்டிருந்தான். அப்போது அவனது கலப்பையின் நுனி அருகிலிருந்த நாகப்புற்றில் இறங்கியது. அதனால் அப்புற்றிலிருந்த நாகக் குட்டிகள் இறந்தன. இரைதேட வெளியே சென்றிருந்த தாய் நாகம் புற்றுக்குத் திரும்பியது. புற்று சிதைக்கப்பட்டு தனது குட்டிகள் இறந்து கிடப்பதைக் கண்டு பெருந்துயருற்ற நாகம் தனது இனம் அழிக்கப்பட்டதை எண்ணி கடும் சினம் கொண்டது.

தனது இனத்தை அழித்தவன் விவசாயியே என அறிந்த அது அவனையும் அவனது குடும்பத்தையும் அடியோடு அழித்து பழி தீர்த்துக் கொள்வது என்று முடிவு செய்தது. அவ்வாறே அவனது வீட்டிற்கு சென்ற நாகம் அவனையும் அவனது மனைவியையும் கொத்திக் கொன்றது. பின்பு அவனது ஒரே மகளையும் கொல்ல விழைந்தது. அவளோ திருமணமாகி அருகில் ஒரு கிராமத்தில் வசிப்பவள். அதை அறிந்த நாகம் அவளைக் கொல்லும் நோக்கத்தோடு அவளது வீட்டை அடைந்தது.

ஆனால் அங்கோ அப்பெண், நாகத்தைத் தெய்வமாக எண்ணி நாளும் பூஜித்து வருவதைக் கண்டது. காலையில் எழுந்து நீராடி நாகத்தை வழிபட்ட பின்னரே பிற பணிகளைச் செய்வதைக் கண்ட நாகத்தின் சீற்றம் தணிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது பக்தியைக் கண்டு அகமகிழ்ந்து அவள் முன் தோன்றி வேண்டும் வரங்கள் தருவதாய்க் கூறியது. அவளோ இறந்த தன் தாய், தந்தையை உயிர்ப்பித்துத் தர வேண்டினாள்,

அவளது வேண்டுதலை ஏற்ற நாகம் அவ்வாறே செய்தது. அவ்வாறு அவளுக்கு வரம் அளித்த அந்த நல்ல நாளே நாக பஞ்சமி என்று இன்றளவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாகபஞ்சமி நாளன்று தமிழகத்திலும், பிற இந்திய மாநிலங்களிலும் வழிபாடுகள் சிறப்புற நடத்தப்படுகின்றன. காஷ்மீரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நாகத்திற்கெனத் தனிக்கோவில்கள் உள்ளன. அக்கோவில்களில் மூலவிக்கிரகங்களில் பாதி உருவம் மனித உருவிலும் பாதி உருவம் நாகவடிவிலும் இருப்பதுபோல் வடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் நாகச் சிலைகள் அரச மரத்தின் அடியில் வைக்கப்பட்டு பூசிக்கப்படுகின்றன. இவ்வழிபாடு செல்வம், பிள்ளைப்பேறு போன்ற தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு நடத்தப்படுகின்றது.

பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் நாக வழிபாடு நடத்தினால் குழந்தை பிறக்கும் எனும் நம்பிக்கை பரவலாக உள்ளது. அதற்கான வழிபாட்டு முறையும் சொல்லப்படுகின்றது. கருங்கல் ஒன்றில் ஒரு படம், இரு படமுள்ள பாம்புகளை வடிவமைத்து அதைப் புனித நீரில் நீராட்டி தூய்மை செய்து. தம்பதிகள் இரவு முழுவதும் உபவாசமிருக்க வேண்டும். மறுநாள் அச்சிலைக்குப் பூசை செய்வித்து அரச மரம் ஒன்றின் கீழ் ஸ்தாபித்து அன்னதானம் செய்து வழிபடின் பிள்ளைப் பேறு கிட்டும்.

இன்றைய விஞ்ஞான உலகில் நாகத்தினால் உண்டாகும் நன்மைகள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நாகத்தின் விடம் கடுமையான நோயினை நீக்கவல்ல மருந்துகள் தயாரிக்கப் பேருதவியாக மருத்துவத்துறையில் பயன்படுகிறது. பாம்பின் தோல் விலைமதிப்பு மிக்கது. இசையில் நாகவராளி எனும் ராகம் உள்ளது. நாகசுரம் எனும் இசைக்கருவியும் நாகத்தின் பெயரால் அமைந்ததே. நாக உருவம் பதிக்கப் பெற்ற மோதிரங்களையோ, பிற அணிகலன்களையோ அணிந்தால் நன்மைகள் சேரும் என சோதிட வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இவ்வளவு சிறப்பினைக் கொண்டு விளங்கும் நாகம் இசைக்கு மயங்க வல்லது. நாகத்தை நாளும் தொழுது வருவோமாயின் அது நமக்கு நன்மையைச் சேர்க்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி

## நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்

ஒரு இளைஞன் தொலை தூரத்திலுள்ள தனது உறவினர் ஊருக்குக் காட்டுப் பாதை வழியாக சென்று கொண்டிருந்தான். நீண்ட தூரம் நடந்து களைத்துப்போன அவன் ஒரு மரத்தடியில் பசுமையான புல்தரையில் சிறிது நேரம் ஓய்வெடுக்கப் படுத்தான். அந்தப்புல் தரை பஞ்சு மெத்தைபோல் அவனுக்குச் சுகமாக இருந்தது. "ஆகா! இந்தப் புல் தரையே இவ்வளவு இதமாக இருக்கிறதே! இப்போது இங்கே படுக்க ஒரு பட்டு மெத்தை இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்?" என்று மனதில் எண்ணினான். என்ன ஆச்சரியம்! அவன் நினைத்தது போலவே அக்கணமே அவனடியில் ஒரு பட்டு மெத்தை இருந்தது.

தான் நினைத்தபடியே பட்டு மெத்தை வந்தது கண்ட இளைஞன் இது கனவா? நனவா? என்று சோதிக்க விரும்பினான். அதனால் "எனது களைப்பும் உடல் வலியும் தீருவதற்கு சில பணியாட்கள் இங்கே இருந்து என் கால்களைப் பிடித்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று நினைத்தான்.

என்ன வியப்பு! அவன் நினைத்த மாத்திரத்தில் அவனைச் சுற்றிப் பணியாட்கள் சிலர் நின்று கால், கைகளைக் பிடித்து விடத் தொடங்கினர். அவனுக்கு வியப்பின் மேல் வியப்பு. "நினைத்ததெல்லாம் நடக்கிறதே! மேலும் பரிசோதிப்போம்" என்று பேராசை அவனைத் தூண்டியது. இத்துடன் "பசியைப் போக்க விதவிமான உணவுகள் கிடைத்தால் எவ்வளவு நலமாக இருக்கும்?" என்று கருதினான்.

அவ்வளவுதான்: தங்கத் தட்டுகளில் அறுசுவை உணவுகள் வந்தன. அவனால் நம்ப முடியவில்லை. இவை எல்லாம் உண்மைதானா என்று கண்களைக் கசக்கிப் பார்த்தான். தான் காட்டு வழியில் ஒரு மரத்தடியில் பசும்புல் தரைமேல் பட்டு மெத்தையில்தான் இருக்கிறோம் என்று தெளிவடைந்தான். நினைத்ததெல்லாம் நிறைவேறுவதில் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்.

இந்த வேளையில் இந்தக் காட்டில் புலியொன்று வந்து தாக்கினால் என்ன செய்வது? என்று விபரீதமாகச் சிந்தித்தான்.

என்ன கொடுமை! அவன் நினைத்தது போலவே புலியொன்று அக்கணமே தோன்றி அவனைத் தாக்கிக் கொன்று தின்றது. பாவம்! அவன் நிழலுக்காகப் படுத்திருந்த இடத்திலுள்ள மரம் 'கேட்டதையெல்லாம் தரும் கற்பக தரு' என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? எனவே நாம் எப்பொழுதும் நல்லதே நினைத்தால் நமக்கு நல்லதே நடக்கும்

**நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்**

''சாஸ்தாபீட இளவரசன்'' **S.** சாம்பசிவ ஸ்ரீ மணிகண்ட சர்மா

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் தந்த மாணிக்கம்

## டாக்டர் நஜன்

வருமொழி செய் மாணிக்கவாசக, நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைக் கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

- வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் -

நான்கு சைவக்குரவர்களில் ஒருவர் மாணிக்க வாசகர். இவர் செய்தருளியது திருவாசகமும், திருக்கோவையாரும். இது சைவத்திருமுறைகளில் எட்டாவது திருமுறையாக விளங்குகிறது. இவர் மதுரை மன்னனின் அமைச்சராக இருந்தவர். திருப்பெருந்துறையில் இறைவனே குருவாக வந்து இவருக்கு உபதேசம் செய்தார். தில்லைக்கு அவர் வந்தபோது 'உங்கள் திருவாசகத்தின் பொருள் என்ன?' என்று தில்லை வாழ் அந்தணர்கள் கேட்டார்கள். அவர் அவர்களோடு அம்பலத்திற்கு வந்து 'நான் பாடிய வாசகத்திற்கு பொருள் அவரே' என்று நடராஜப் பெருமானைச் சுட்டிக் காட்டினார்.

மாணிக்க வாசகர் "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்னும் பதிகத்தில் தான் சிவபெருமானை இந்தப் பிறவியிலேயே உறுதியாகப் பற்றிக் கொண்டதாகக் கூறுகிறார்.

## சிவனையே சிக்கெனப் பிடித்தார்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்தே செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

- பிடித்து பத்து -

தாயானவள் தன்குழந்தை அழுதபோதுதான் பாலூட்ட வேண்டும் என்றிராமல் தக்க காலத்தில் குழந்தையின்மேல் பரிவு கொண்டு பாலூட்டுவாள். அதேபோல் ஆண்டாள் தனது பக்தர்களின் கோரிக்கைகளை தானாகவே அறிந்து உதவி புரிவாள். அப்படிப்பட்ட தாய் போன்ற நீ என் மீதுள்ள பரிவால் நான் செல்லுமிடம் தோறும் என் பக்கமும் முன்னும் பின்னுமாக நீ இருந்ததை கவனிக்காத பாவியானேன். உன் அருள் எனக்கு கிடைத்ததால் உன்னைத் தொடர்ந்தேன். உன்னை உறுதியாகப் பற்றிக்கொண்டேன். நீ இனி எங்கும் செல்ல முடியாது. என் மனதுள் நிலையாக அமரவேண்டும்.

நவரத்தினங்களுள் சிறந்தது மாணிக்கம்.. இதை ராஜரத்தினம் என்பார்கள். திருமாலைக் கருமாணிக்கம் என்றும், சிவபெருமானை செம்மாணிக்கம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவதுண்டு. ஆகவே தான் மாணிக்கம் போன்ற வாசகத்தையுடைய வாதவூரடிகளைச் சிவபெருமானே திருப்பெருந்துறையில் "மாணிக்கவாசக" என அழைத்தார். பழம் பாடலும் "வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்" எனக்கூறி இவர் வாசகத்தை சிறப்பித்தது.

திருவாசகத்திற்கு நடுநாயகமாக விளங்குவது திருவெம்பாவை. சைவ சித்தாந்த தலைமை சாஸ்திரம் என்றழைக்கப்படும் சிவஞானபோதத்திற்கு இது ஊற்றுக் கண்ணாக இருப்பது.

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று இறைவனே கேட்டு மாணிக்கவாசகரை திருக்கோவையார் என்ற அகத்துறை பாடல்களைப் பாடவைத்தார் என்ற வரலாறு திருவெம்பாவை சிறப்பைக் காட்டுகிறது. திருக்கோவையாருக்கு திருவெம்பாவை வகை நூல் என்பர்.

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்." என்னும் பழமொழி யாவரும் அறிந்ததே.

மக்கள் உள்ளம் இயற்கையிலேயே நெகிழ்ச்சி உடையது. குழந்தை உள்ளம் இயற்கை உள்ளம் எனலாம். வயது ஏறஏற இயற்கை உள்ளம் கல்லாய் விடுகிறது. கல்லான உள்ளத்தை மீண்டும் கனிவிக்க வல்லது திருவாசகம்.

மாணிக்க வாசகர் முழு வாழ்க்கை வாழ்ந்தவர். சமய நூல்கள் கூறும் தத்துவப் படிகளில் கீழிருந்து மேலே ஒழுங்காக ஏறிச் சென்றவர், தளராமல் உழைத்தவர். அச்சம் உற்ற போதெல்லாம் அழுதழுது அவனருளைப் பெற்று அச்சம் அகன்றவர். இவர் வழி செல்ல நினைப்பவருக்கு உறுதி, உழைப்பு. இறைவன்பால் அன்பு வேண்டும்.

அவர் தலயாத்திரை சென்ற போது திருவண்ணாமலை வந்திருக்கிறார். அங்கு மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன்அதிகாலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொண்டு நீராடச் செல்வதைக் கவனித்திருக்கிறார். அவர்களிடையே பேச்சும், ஏச்சும், பரிகாசமும், நகையும், அன்பும், ஆரவாரமும் இவர் கவனத்தைக் கவருகிறது. இந்தப் பேச்சிலே சிவபக்தியும் கலந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். என்று அவர் மனதில் படுகிறது. "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை" எண்ணி பாட ஆரம்பிக்கிறார். திருவெம்பாவை உதயமாகிவிடுகிறது.

"மலவிருளூற்று உறங்காமல் மன்னு பரிபாகர் அருள் செலமுழுக வருகலனச் செப்பல் திருவெம்பாவை" என்று கூறுகிறது திருப்பெருந்துறை புராணம்.

"திரு" என்பது தெய்வத்தன்மையையும் 'எம்' என்பது உயிர் தன்மையையும் பாவை என்பது வழிபாட்டுக்கினிய திருவுவையும் குறிக்கும்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் 'பாவாய்' என்று குறிப்பிட்டுப் பாடினார். சக்தி ஸ்வரூபமாக நம் உடலுக்குள்ளேயே இருக்கும் ஆத்ம சக்தியானது நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைப் பிறக்கச்செய்கிறது. அது மனோன்மணியம் என்ற நவசக்திகளை எழுப்புவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

கிருஷ்ண தோத்திரத்திலும் 'எம் பாவை' என்ற பதம் வருகிறது. எம் என்ற பதத்தை எடுத்துவிட்டு திருப்பாவை என்று வைஷ்ணவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாவைப் பாட்டின் இலக்கணம் நான்கடிக்கு அதிகமாக பத்து அடி வரை வரும் கொச்சகம் ஆகும். இதன்படி திருவெம்பாவை எட்டு அடிகளைக் கொண்டு வந்து கொச்சக கலிப்பா ஆகும்.

## திருவெம்பாவை தத்துவம்

ஒவ்வொரு நாள் அந்தி வேளையிலும் உயிர்கள் ஒடுங்க ஆரம்பிக்கும். இது சிவசத்தியின் சம்ஹார தத்துவத்தையும், விடியற்காலை சிவசக்தியின் படைப்பு தத்துவத்தையும் குறிக்கிறது. விடியற்காலையாகிய ஐந்து நாழிகை படைப்பு காலத்தைக் குறிக்கும். சிவசக்தியின் அருட்செயலை திருவெம்பாவை போற்றுகிறது.

எட்டு பேர்களை, முதலில் கிளம்பிய பெண் எழுப்புகிறாள். ஆக ஒன்பது பெண்கள் நவசக்திகள். இவர்கள் மனோன்மணி, சர்வபூதமனி, பகலவிசுரனி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை, பலப்பிரதமனி, பகலவிசுரனி.

இந்த நவசக்திகளும் உலகப் படைப்பின் பொருட்டு முன்னவள் பின்னவளை செயற்படுத்திய குறிப்பே முதல் எட்டுப் பாட்டுகளாகும். ஒன்பது முதல் இருபதாவது பாட்டு முடிய இந்த நவசக்திகள் ஒன்று சேர்ந்து சிவபெருமானைப் புகழ்ந்து துதிப்பதாகும்.

திருவருள் சக்தியாகிய அம்பிகை, பாவைத் திருவுவில் நின்று ஆனந்தத் தாண்டவத்தில் தூக்கிய திருவடி அருளால் அவனுடன் இரண்டற கலக்கின்ற பேரின்பத்தைத் தருகிறாள்.

அர்த்த நாரீஸ்வரராகிய சிவபெருமானை விட்டு நீங்காத பராசக்தி அருளால் ஏவப்பட்டவள் மனோன்மணி சக்தி. இவள்தான் மும்மலங்களிலிருந்து உயிர்களை விடுவித்து இறைவன் திருவடிகளில் சேர்ப்பிப்பவள். இச்சக்தியே ஆன்மா, சூரியன், சந்திரன், ஆகாயம், தேயு, வாயு, அப்பு, பிருதிவியாகிய அஷ்ட மூர்த்திகளிடமுள்ள சக்திகளை எழுப்புவதாக திருவெம்பாவை முதல் எட்டுப் பாட்டுகளும் அமைந்துள்ளன. ஒன்பதிலிருந்து இருபது வரை நவசக்திகளும் சேர்ந்து சிவபெருமானைப் போற்றித் துதிப்பதாக அமைந்துள்ளன. ஒன்பதாவது பாட்டிலும் பத்தொன்பதாவது பாட்டிலும் பயன் கருதி விண்ணப்பம் செய்கின்றனர். பத்தாவது பாடலில் திருக்குளம் செல்கின்றனர். பதினொன்று முதல் பதினெட்டு வரை அம்மையப்பர் வடிவமான திருக்குளத்தில் அவர் அருள்மயமான நன்னீரில் திருவருளை ஆடிக்கொண்டும் நீராடுகின்றனர். இருபதாவது பாடலில் படைப்பு முதலிய ஐந்து தொழில்களின் உண்மையும் அவற்றால் விளையும் பயனும் விளக்கப் பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் திருவடிப்புகழ் இந்த பாடல்களில் விவரமாகக் காணப்படுகிறது.

விண்ணோர்கள் ஏத்துதற்கு கூகம் மலர்ப்பாதம். பாதாளம் எனினும் கீழ் சொற்கழிவு பாதமலர். ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள், தோற்றமாம் பொற்பாதம், போகமாம் பூங்கழல்கள், ஈறாகும் இணையடிகள் மால் நான்முகனும் காணாத புண்டரீகம் யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள் என ஐந்தொழில்களுக்கும் அவன் திருவடிகளே காரணம் என்றாலும் அவன் மெய்யன்பர்களுக்கு எளிய வந்த பிரான் "நந்தம்மை கோதாட்டி இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலர் பொற்பாதம் தந்தருளும் சேவகன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுண்மையை பெரிய புராணத்தில் பலநாயன்மார்கள் வரலாற்றில் காண்கிறோம்.

திருவாசகத்தில் திருவெம்பாவை 'சக்தியை வியந்தது' என்ற தலைப்புடன் காணப்படுகிறது. இதிலிருந்து திருவாசகம் தேவியின் வணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

## உனக்கே அடைக்கலம்

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்பது ஒரு பழமொழி. இந்த வார்த்தைகளுடன் ஆரம்பமாகும் திருவெம்பாவையின் பத்தொன்பதாவது பாட்டு அடைக்கலப் பாட்டாகும்.

ஒரு பிள்ளையை ஒருவரிடம் ஒப்படைக்கும்போது அவரே தாயாகவும் தந்தையாகவும் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று சொல்வதுண்டு. குருகுல ஆசிரியரிடம் தன் பிள்ளையை ஒப்படைக்கும் போது இம்மாதிரி சொல்வதுண்டு. திருமண காலத்திலும் பெண்ணைப் பெற்றவர்கள் இதைச் சொல்வதுண்டு.

பாவை நோன்பு நோற்கும் பெண்கள் இறைவனிடம் இம்மாதிரி கூறுகிறார்கள். இவர்கள் கவலை எல்லாம் சிவபெருமானுக்கு அன்பர்களாக இல்லாதவர்களை மணந்துகொள்ள நேர்ந்து விடலாகாதே என்பதே. அச்சத்திற்கு வேறு காரணமும் உண்டு. அடைக்கலமாக ஒப்புவித்தபின் 'அது வேண்டும்', 'இது வேண்டும்' என்று கேட்பது சரியன்று. அடைக்கலமாகப் பெற்றுக் கொண்டவனுக்கு தெரியாததையா அவர்கள் புதிதாக சொல்லப்போகிறார்கள்.

கை, சிவகைங்கரியத்திற்கே அர்ப்பணம் ஆகவேண்டும் என்று சொல்வதுடன் அமையாது கண் அல்லும் பகலும் 'சிவனையன்றி காணாது ஒழிக' என்றும் கோருகிறார்கள்.

எங்கை உனக்கு அல்லற்கால் எப்பணியும் செய்பற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க

இத்தகைய பக்திக் காதலிகள் தங்களுக்கு 'கணவர்களாக சிவபக்தர்கள் வாய்க்க வேண்டும் என்று கோருவதில் வியப்பென்ன?

திருவெம்பாவையின் உயர்நிலைக் கொள்கையாகிய கைங்கரியப பிரார்த்தனை இதில் வெளியிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போற்றிப் பாட்டு

திருவெம்பாவையின் கடைசிப் பாடலான இது இறைவனின் திருவடிப் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரீகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடு ஏலோர் எம்பாவாய்.

ஆதியாம் நிலைமைக்கும் அந்தமாம் நிலைமைக்குமிடையே நடைபெறுகின்றன சிவபெருமானின் ஐந்தொழில்கள். முதலில் படைப்பு கூறப்படுகிறது. - தோற்றமாம் பொற்பாதம்: பின்னர் காப்பாற்றுதல் - போகமாம் பூங்கழல்கள்: அழித்தல் - எல்லா உயிர்க்கும் ஈறாம் என்பதால் குறிப்பிடப்படுகிறது. மறைத்தல் என்பதை 'மால்நான் முகனும் காணாத புண்டரீகம்' என்பதால் உணர்த்தப் படுகிறது.

அருளல் என்பதையும் திருவடிகளே செய்கின்றன என்பது 'யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்' என்பது குறிப்பிடுகின்றது. கடைசியாக மார்கழி நீராட்டம் தங்களைக் காத்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கப்படுகின்றது. இறைவனைப் பக்திக் காதலுடன் வாழ்த்துவதற்கு மார்கழி நீராட்டம் காரணமாக இருந்ததால் அந்த நீராட்டத்தையும் போற்றி வாழ்த்துகிறார்கள்.

இறைவன் திருவடிகள் பாதமலர் என்றும் பூங்கழல்கள் என்றும் பொன்மலர்கள் என்றும் புகழப்படுகின்றது.

திருவெம்பாவை பாசுரம் பிறந்தது திருவண்ணாமலையில்தான் என்பதைக் குறிப்பது போல திருவண்ணாமலை தத்துவத்தை உணர்த்தும் அடி முடி தேடிய விவரம் போற்றி பாட்டில் குறிப்பிடப்படுகிறது. திருவண்ணாமலை ஆலயத்தில் உண்ணாமலை ஆலயங்களில் திருவெம்பாவை கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

## இசையின் தன்மை

நுண்கலைகள் எல்லாவற்றையும் விட இசையானது மனித உள்ளத்தின் அடித்தளத்தில் ஆழப்பதிவதுடன் முழுமையும் அடைகின்றது எனலாம். இசைக்கு அசுணப் புள்ளே கட்டுண்டு மயங்கிக் கிடக்கும் தன்மை பெற்றுள்ள போது பகுத்தறிவு படைத்த மனிதருள் தன்னையிழந்து மயங்காதவர் ஒருவரும் இரார் என்பது உறுதி. மனிதரைக் கவர இசைத்திறமை மட்டும் போதுமானதன்று. மொழியும், அதன் அமைப்பும், இசைபாடுவோரின் குரலும், பொருள் விளங்கப் பாடுதலும் மிக முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு குழந்தை எழுப்பும் பொருளற்ற ஓசை தாய்க்கு இனிய இசையாக இருக்கிறது. குயில் தன் பேடையை அழைக்கவும், இன்ன பிறவற்றுக்காகவும் எழுப்பும் ஓசையை ஒப்பற்ற இனிய இசை என்கிறோம். 'இசைக் குயில்' என்றும் 'குயிலிசை' என்றும் கூறுகிறோம். ஆனால் அதே சமயத்தில் 'காகம் கரைகிறது' என்கிறோம். மாடு அம்மா என்று அழைக்கும் ஓசையை விரும்புகிற அளவுக்கு கழுதையின் கத்தலை விரும்புவதில்லை. கழுதை கத்துகிறது என்று இழிவு தோன்றக் கூறுகிறோம். காரணம் என்ன? இனிப்பை விரும்பும் அளவு கசப்பை விரும்பாததே. எத்தகைய விந்தையான மனிதர்கள்.

கேட்பாரைப் பிணிக்கும் இனிய தன்மையைப் பெற்ற ஒலியே இசையெனில் சாலப் பொருத்தமுடையதாகும். மற்றவையெல்லாம் வெறும் ஓசையே. - கூச்சலே - சத்தமேயாகும்.

## இசையின் தொடக்கம்

தமிழ் நிலத்தையும் பண்ணையும் 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே' என்றார் தொல்காப்பியர். நிலங்களில் முல்லை முதன்மை பெற்றது போல் தமிழிசையில் முதன்மையுடையது முதற் பண்ணாவது முல்லைத் தீம்பாணி எனலாம். இளங்கோவடிகள் இயற்றியுள்ள சிலப்பதிகாரத்தில் இப்பண்ணை ஆய்ச்சியர் குரவையுள் காணலாம். இப்பண்ணை முல்லைப்பண் என்றும் கூறுவர்.

இதனைத்தான் இளங்கோவடிகளும் தம் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள்,

அவர் தாம்,

செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கை கோஒத்து
அந்நிலையே யாடற்சீ ராய்ந்துள்ளார் முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொலடலைப் புனத்துக் குருநடதொசித்தான் பாடுதும்
முல்லைத்தீம் பாணியென்றாள்.

(சிலப்: 17:17)

எனக் குறிக்கிறார்.

மரம், செடி, கொடிகளிடத்தும், நாணல், புதர்களிடையேயும் வீசும் காற்று ஓர் இனிய ஓசையை எழுப்பிச் செல்கிறது. அதே போன்று பனை மரம், தென்னை மரம் போன்றவற்றிடையே தாக்கிச் செல்லும் காற்றும் இனிய ஓசையை எழுப்பிச் செல்கிறது. இதனினும் இனிய ஓசை சவுக்கு மரத்தோப்பில் தாம் கேட்கக்கூடும். இது போலவே பறவை, மிருகம், வண்டு முதலானவற்றின் ஒலியும் அன்றைய மனிதனின் இசைக்கு முதற் காரணமாயிருத்தல் வேண்டும் எனவும் துணிந்து கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் தம் பாடலொன்றில்,

'பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு வண்டு
தழைமுங்கில் இசைத்ததைத் தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும் இசைத் தமிழே'

எனக் கூறுகிறார்.

அவற்றைப் போன்றே விலங்குகளின் ஒலியும், பறவைகளின் ஒலியும் சுரங்களின் அமைப்பிற்குத் துணை புரிந்தன என்பர் ஆராய்ச்சியாளர். இதனைத்தான்,

''வேண்டிய வண்டு மாண்டகு கிளியும்
குதிரையும் யானையுங் குயிலுந் தேதுவும்
ஆடு மென்றிவை யேழிசை யோசை''

என்னும் பிங்கல நிகண்டு அடிகளாலும்,

வண்டொடு கிள்ளை வாசி மதயானை தவளை தேனு
ஒன்றிறல் ஆடென்று எழும் ஓதுமே ஏழிசை யோசை'

என்னும் அடிகளாலும் அறிய வருகிறோம்.

மேற்கண்ட பாக்களின் குறிப்பால் இயற்கையாக ஒலிக்கும் பறவையினங்களின் ஒலி, மிருகங்களின் ஒலி ஆகியன ஏழிசைகளுடன் ஒத்திருப்பதை நாம் உணருகின்றோம்.

## ஏழிசை

எங்கும் நிறைந்த ஒலியினின்று எழும் ஓசையே இசையெனப்படுகிறது. அவ்விசை ஏற்றத் தாழ்வோடு பலவித ஓசையினோடு எழுப்பப்படுகின்றது. இவ்வண்ணம் இயற்கையினால் மட்டுமன்றி, செயற்கையாக குரலாலும், இசைக் கருவிகள் மூலமும் இசை உண்டாக்கப்படுகின்றது. இவ்விசை, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு வகையான சுரங்களாக (ஏழிசையாக) பழந்தமிழர்களால் பகுக்கப்பட்டது. இதுவே இந்நாளில் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம், நிஷாதம் என்பதை ச, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு சுரங்களாகக் கொண்டுள்ளனர்.

பிங்கல நிகண்டு, சேந்தன் திவாகரம், சூடாமணி நிகண்டு அடிகளால் அறியப்பெற்ற ஏழு ஒலிகளையும் எந்தெந்த சுரத்திற்கு ஒத்துள்ளன என்பதை இனிக் காண்போம்.

குரல் என்னும் சட்ஜமத்தின் ஒலி வண்டினோசைக்கும், துத்தம் என்னும் ரிஷபம் கிளியின் கொஞ்சலோசைக்கும், கைக்கிளை என்னும் காந்தாரம் குதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைத்தலையும், உழை என்னும் மத்திமம் யானையின் பிழிறலையும், இளி என்னும் பஞ்சமம் மயிலின் அகவலையும், விளரி என்னும் தைவதம் பசுவின் ஓசையையும், தாரம் என்னும் நிஷாதம் ஆட்டின் ஒலியையும் ஒத்ததாகக் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சுரங்கள் ச, ரி, க, ம, ப, த, நி என்பன, இந்நாளில் வழங்கப்படுவன. இதற்கு முன்னர், தமிழ் நெடில் எழுத்துக்களான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பவற்றையே ஏழு சுரங்களாகத் தமிழர் கொண்டிருந்தனர். என்பதனை திவாகரம் குறிக்கிறது. இதைப் பின்னர் காண்போம்.

## இசைக்கருவிகளின் தோற்றம்

காடுகளில் பலத்த காற்று வீசும்போது ஓர் இனிய ஒலி எழுந்ததை முல்லை நிலத்து ஆதி மனிதன் கேட்டான். அவ்வொலி எங்கிருந்து வருகின்றது என்பதை ஆராய முனைந்தவன், இறுதியில் மூங்கிலின் துளைகள் வழியாக ஒலியெழுகிறது என்பதை அறிந்தான். பின்னர் மூங்கிலைக் கொணர்ந்து அதைப் பழுக்கக் காய்ச்சிய கோலால் தொளை செய்து வேய்ங்குழல் உண்டாக்கினான். அதில் பாலைப் பண்ணை வாசித்து இன்புற்றான். வேட்டையாடும் காலத்து அவன் உபயோகித்த வில்லினின்று எழுந்த ஒலியினை மூலமாக்கி யாழ் செய்தான் எனக்கொள்ளலும் ஏற்புடைத்தாகும்.

முதலில் குழலையும் அதன் பின்னர் யாழையும் அவன் உபயோகித்த முறையினை,

'..................ஓங்குமிசைக்
கோட்டவும், கொடியவும் விரை இக்கட்டப்
பல பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்
கன்றதர் நிரையொடு கானத் தல்கி
அம் நுண் அவிர்புகை கமழக் கைம் முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழச்
செந்தீம் தோட்ட கருத்துளைக் குழலின்
இன்தீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளை செத் (து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மகாண்டமும் ஞான காண்டமும்

-சுவாமி பரமார்த்தானந்தர்-

வேதத்தில் கர்ம காண்டம் என்றும் ஞான காண்டம் என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன.

இரண்டும் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்று சொல்லிக்கொடுக்கின்றன.

கர்மகாண்டம் பிரச்சனைகளை தற்காலிகமாகத் தீர்க்கச் சொல்லிக் கொடுக்கிறது. இதில் ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஒரு தனித்தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு பிரச்சனை போனால் இன்னொரு பிரச்சனை வரும். இப்படி வந்துகொண்டேயிருக்கும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு பிடித்து விட்டோம், இனி பிரச்சனைகளே இல்லை என்று சொல்ல முடியாது.

இது, வியாதி வந்தால் மருந்து சாப்பிடுவது போல. மருந்து சாப்பிட்டு விட்டதால், இனி வியாதியே வராது என்று வைத்தியர் அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க முடியுமா? அந்த மருந்து சாப்பிட்டதாலேயே பழைய வியாதி போய், புது வியாதி வருவதுமுண்டு.

ஆனால் ஞான காண்டம், உபநிதஷங்களின் மூலமாக, அதாவது வேதாந்த ஞானத்தின் மூலம், நமக்குக் கொடுப்பது, நம் பிரச்சனைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு.

நிரந்தரமான தீர்வு என்றால் பிரச்சனைகள் போய்விடும் என்று பொருள் அல்ல. அவை இருக்கத்தான் இருக்கும். நம் பிராரப்தம் இருக்கும் வரை, பிரச்சனைகளும் இருக்கும். இன்பமும், துன்பமும் இருக்கத்தான் செய்யும். ஆனால் நாம் வளர்ந்து விடுவோம். நாம் பிரம்மம் என்பதை உணர்ந்து விடுவோம். அப்பொழுது இந்தப்பிரச்சனைகள் நமக்கு ஒரு பொருட்டாகவே தோன்றா. ஏன், அவை இருப்பதாகவே நாம் உணர மாட்டோம்.

ஓர் உதாரணம் சொன்னால் இது இது உங்களுக்கு நன்கு விளங்கும். ஒரு மெழுகுவர்த்தி இரவு வேளையில் நல்ல வெளிச்சம் கொடுக்கிறது. ஆனால் பொழுது விடியட்டும். சூரியன் தலைக்கு மேலே வரட்டும். அப்பொழுது மெழுகுவர்த்தியின் வெளிச்சமே நமக்குத் தெரியாது. மெழுகுவர்த்தி இருப்பதாகவே தெரியாது.

அதனால்தான், ஹனுமனுக்கு, கடல் ஒரு குட்டையைப் போலவும், அரக்கர்கள் கொசுக்களைப் போலவும் தோன்றினார்களாம்.

ஞானியாக இருந்தும், இப்படி இவனுக்கு கஷ்டங்கள் உள்ளனவே என்று மக்கள் அவனைப் பற்றி நினைக்கலாம். ஆனால் சூரிய ஒளியில் மெழுகுவர்த்தியின் ஒளியை உணராதது போன்று, அவன் தன் கஷ்டங்களை உணரவே மாட்டான். பகவான் கீதையிலே சொன்னது போன்று துன்பத்தில் துடியாத மனத்தினனாய், இன்பத்தில் ஆசை எழாதவனாய் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை யாத்திரை ஐயப்பன் வழிபாடு

**ஆர். சக்திதரன்,** (தமிழ்நாடு)

சபரிமலை யாத்திரை செல்ல நினைப்பவர்கள், முதலில் ஒரு குரு ஸ்வாமியிடம் சென்று, அவர் அனுமதி பெற்று, பின்னர் அவருடன்தான் யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். குருஸ்வாமி தேவைதானா? தானாகவே ஒருவர் யாத்திரை மேற்கொள்ளக் கூடாதா?

குருவுடன் யாத்திரை மேற்கொள்வது கிடைத்தற்கரிய ஒரு பாக்கியமாகும். இந்த பாக்கியம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் கிடைக்கிறது. கலையானாலும் சரி, கல்வியானாலும் சரி, குரு அவசியம். அதுவும் ஆன்மீக வழிக்கு குரு என்பவர் மிகமிக அவசியம். நமது இந்து மதத்தில் குருவிற்கு மேலான இடத்தை அளித்திருக்கிறார்கள்.

தாயும் தந்தையும் ஒருவனை மனிதனாகப் படைக்கிறார்கள். குருவோ கடவுளையே காட்டுகிறார்.

சபரிமலை யாத்திரை என்பது ஓர் ஆன்மீக யாத்திரை. குருவின் துணைகொண்டு அதனை மேற்கொள்வதே சிறந்தது.

**சபரிமலை செல்பவர்கள் மாலை அணிந்து கொண்டுதான் செல்ல வேண்டுமா?**

எந்த ஒரு காரியம் செய்வதற்கு முன்பும் சங்கல்பம் செய்து கொள்வது என்பது மிகவும் முக்கியம். மனதில் உறுதியான சங்கல்பம் இல்லாமல் செய்யும் எந்தக் காரியமும் முழுமையடைவதில்லை. மலைக்குப் போகும் முன் மாலை அணிந்துகொள்வது என்பது சங்கல்பம் செய்து கொள்வதே. அதாவது, சீரிய முறையில் விரதம் இருந்து, நல்ல முறையில் யாத்திரை மேற்கொண்டு பகவானது மேலான தரிசனம் காண்பேன் என்று சங்கல்பம் செய்துகொண்டிருப்பதையே முத்திரை மாலை உணர்த்துகிறது.

**ஐயப்ப வழிபாட்டிற்கும், யாத்திரைக்கும் மார்கழி மாதத்தை ஏன் தேர்ந்தெடுக்கிறார்கள்?**

மார்கழி மாதம் மிகவும் மேலான மாதம். 'மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன்' என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறார். மேலும் மார்கழி மாதம்தான் தேவர்களுக்கெல்லாம் பிரம்ம முகூர்த்தம். அதாவது விடியற்காலை நேரம். அந்த நேரத்தை நாம் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினால் அது நமக்கு நல்ல முன்னேற்றத்தைத் தருகிறது. ஏன், ஆண்டாள் 'திருப்பாவை' பாடியதும் மார்கழியில்தானே? மார்கழி குளிரில் குளிப்பதும், இரவு வெறும் தரையில் படுப்பதும் உடல் பற்றைக் குறைக்கிறது. உடல் பற்றுக் குறைய குறைய ஆன்மீக உணர்வு மேலெழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரதம் இருப்பவர்கள் தீட்சை அதாவது தாடி வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றிருப்பது ஏன்?**

ஒருவன் தன்னையும் தன் உடலையும் மறக்க மறக்க இறைவனது நினைவு அதிகரிக்கிறது. தன்னையும் தன் அழகையும் மறந்து இறைவனையே நினைக்கும் போது இறைவனது அருள் அவனுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கிறது. இறையருள் கிடைக்க தன்னை மறக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே தீட்சை.

**பொதுவாக ஐயப்ப பக்தர்கள் பூஜை, பஜனை என்ற பெயரில் கூச்சல் போடுவதாகப் பலர் நினைக்கின்றாகள். இப்படிப்பட்ட பஜனை தேவைதானா?**

பஜனை என்பது பகவானது நாமத்தை மனமுருகிப் பாடுவதாகும். கைகொட்டி, தாளம் போட்டு, தன்னை மறந்து பக்தர்கள் பாடும்போது அவர்களது அகம்பாவம் போய் விடுகிறது. அகம்பாவம் இல்லாத மனதில் இறைவன் வந்து அமர்கிறான். மேலும், "கைகொட்டி பஜனை செய்யும்போது. மரத்தின் மீதிருந்து பறந்துவிடும் பறவைகளைப்போல, நாம் செய்யும் பாவங்கள் நம்மைவிட்டுப் பறந்து விடுகின்றன" என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் குறிப்பிட்டிருக்கிறார். மனமுருகி பக்தர்கள் செய்யும் பஜனையை, நாமசங்கீர்த்தனத்தை வெறும் கூச்சல் என்று பரிகசிக்கக்கூடாது.

**சுவாமியே.... சரணம் ஐயப்பா என்று இழுத்து உரக்கக் கூறுவது ஏன்?**

"சுவாமியே சரணம் ஐயப்பா" என்று சாதாரணமாகவும் சொல்லலாம். ஆனால், இதற்கும் அதை இழுத்து உரக்கக் கூறுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. இழுத்து உரக்கக் கூறுவது சுவாசப் பயிற்சிக்கு ஒப்பாகிறது. இதனால் பிரணாயாமம் செய்வதால் கிடைக்கும் அதே பலன் கிடைக்கிறது. அவ்விதம் கூறும்போது நம்மையும் அறியாமல் நம் மனம் பகவானின் பாத கமலத்தில் லயித்து விடுகிறது. இது அனுபவத்தால் பெறக்கூடிய இன்பம். வார்த்தைகளால் விளக்க முடியாது.

**மாலை தரித்த ஐயப்பமார்கள், மற்றவர்களை ஐயப்பா என்றும் சுவாமி என்றும் அழைப்பது ஏன்?**

இதனால் விரதமிருக்கும் ஐயப்பமாரும் தாங்கள் காணும் எல்லாமே ஐயப்ப ஸ்வாமிதான் என்ற மனநிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள்.

**இருமுடியின் தத்துவம் என்ன?**

இருமுடியில் முன்முடியில் அதாவது முன்பகுதியில் சுவாமிக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்களும், நைவேத்தியப் பொருட்களும், பின் முடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தனுக்கு அதாவது யாத்திரீகனுக்கு வேண்டிய பொருட்களும் கொண்டு செல்கிறோம். சபரிமலையை நெருங்க நெருங்க பின் முடியில் உள்ள பொருட்கள் வெகுவாக உபயோகிக்கப்பட்டு சந்நிதானம் அடையும்பொழுது அருமுடியில் வெறும் முன்முடிப் பொருட்கள்தான் இருக்கும். அபிஷேகம் முடித்துத் திரும்பும்போது இருமுடியில் பகவானது பிரசாதங்கள் மட்டுமே இருக்கும். பகவானை நெருங்க நெருங்க நமது பொருட்கள் என்பன குறைந்து, முடிவில் அவனைத் தரிசித்து திரும்பும்பொழுது நமக்கென்று இருப்பது அவனது அருட்பிரசாதம் ஒன்றே என்பதுதான் இருமுடியின் தத்துவமாகும்.

**இருமுடியில் நாம் கொண்டுபோகும் நெய்த்தேங்காயின் தாற்பரியம் என்ன?**

நாம் இங்கு நெய் நிரப்பிக் கொண்டு போகும் தேங்காயை சபரிமலையில் உடைத்துப் பார்க்கும்போது அது நன்கு உறைந்து பூரணம் போல் காட்சியளிக்கும். குருவானவர் நமது முக்கண்களில் ஒன்றான அகக்கண்ணைத் திறந்து அதன் மூலம் பக்தி என்ற நெய்யை நம்மனதில் நிரப்பி விடுகிறார். சிறிது காலத்திற்குப் பிறகு அதுவே பூரண ஞானமாக வெளிப்படுகிறது. இதுவே அதன் உட் கருத்து.

**இருமுடியை ஏன் தலையில் ஏந்திச் செல்ல வேண்டும்? தோளின் மீதோ, தோள் பையிலோ கொண்டு செல்லக் கூடாதா?**

'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்'. யாரையாவது போற்றினால் "ஏன் அவரைத் தலை மேல் வைத்துத் தாங்குகிறாய்?" என்று கேட்பார்கள்.

தலைமீது தாங்குவது என்பது அவ்வளவு மேலான விஷயம். தலைமீது ஒரு பொருளைத் தாங்கி வருகிறோமென்றால், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது அர்த்தம். பரதன் ஸ்ரீ ராமனின் பாதுகையைத் தோளிலோ, தோள் பையிலோ கொண்டு செல்லவில்லை. மாறாக, தன்தலைமீதுதான் சுமந்து நடந்து சென்றான் என்பதை ராமாயணத்தில் பார்க்கிறோம். ஆகையால் இருமுடியைத் தலைமீது ஏந்திச் செல்வதுதான் பொருத்தமானதாகும்.

**சபரிமலைக்குச் செல்ல சிறிய பாதை இருக்கிறது. அதைக் கைவிட்டு மிகவும் கஷ்டமான பெரிய பாதை வழியாகத்தான் செல்ல வேண்டுமா?**

கடினமான பெரிய பாதையில் உள்ள கஷ்டங்களை நாம் பொருட்படுத்தாமல் ஐயனின் நாமம் ஒன்றையே மனதில் கொண்டு செல்ல செல்ல முடிவில் பூலோக ஸ்வர்த்தகமாம் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனின் சந்நிதியை அடைகிறோம். கரடு முரடான காட்டுப் பாதை என்பது நம்முடைய உலக வாழ்க்கையைக் குறிக்கிறது. கஷ்டங்களோடு கூடிய இவ்வுலக வாழ்க்கையின் துன்பங்களினால் மனம் தளர்ந்து போகாமல் 'பகவானை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரையே உச்சரித்த வண்ணம் வாழ்க்கையை நடத்தும் ஒவ்வொருவரும் அவனது பாதக் கமலங்களையே அடைவோம்.

**ஜோதியின் தத்துவம் என்ன?**

கடவுளுக்கு உருவம் உண்டு, அருவமும் உண்டு. சபரிமலையில் ஏகாந்தமாய் சின்முத்திரையுடன் கூடிய யோக வடிவில் உருவங்கொண்ட அதே மூர்த்தியே அருவமான ஜோதி வடிவமாவான் என்பதை உணர்ந்து ஜோதி அந்த ஜோதியின் பிரகாசத்தினால் தான் சூரிய சந்திரர்கள் பிரகாசிக்கிறார்கள்.

**ஐயப்பன் பிரம்மசாரி என்பது பிரசித்தமானது. அப்படியிருக்க அவரை பூரண புஷ்கள காந்தரே என்று அழைப்பது பொருந்துமா?**

பூர்ண புஷ்களா என்பது அவரது சக்திகள். அதாவது இச்சா சக்தி, கிரியா சக்தி. ஐயப்பனே ஞான பிரம்ம வடிவம், இச்சையும் கிரியையும் இருந்தால்தான். ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தை செய்ய முடியும் என்ற தத்துவத்தை விளக்குபவரே பூர்ண புஷ்கள காந்தர்.

**எரிமேலியில் பேட்டைத் துள்ளல் என்ற காட்டுத் தனமான சடங்கு தேவைதானா?**

'பேட்டைத் துள்ளல்' என்பதை காட்டுத்தனமான சடங்கு என்று சொல்வது தவறு. வேட்டையாடுதல் என்பதை உணர்த்துவதே 'வேட்டைத் துள்ளல்' குறிப்பிடுகிறது. எதை வேட்டையாடவேண்டும்? நம்முடைய மனதிலுள்ள காமம், கோபம், பேராசை, மோசம், மதம், மாத்சரியம் என்ற விலங்குகளை வேட்டையாடிச் செல்ல வேண்டும் என்பது இதன் தத்துவம். ஸ்ரீ சபரிமலை செல்ல பெரிய பாதையில் நடக்க ஆரம்பிக்க முன்பு துள்ளல் நடை பெறுகிறது. அதாவது இறைவனைக் காணச் செல்ல முன் நம்முடைய மனதில் இருக்கும் 'கொடிய விலங்குகளைக் கொன்றுவிட்டுத்தான் செல்ல வேண்டும்' என்பதையே அது உணர்த்துகிறது. மேலும், ப்ராக்டிக்லாகப் பார்த்தாலும் பெரிய பாதையில் நடக்க ஆரம்பிக்குமுன் அது ஒரு warming up exercise போலவும் அமைகிறது.

**பதினெட்டாம் படியின் தத்துவம் என்ன?**

ஐந்து இந்திரியங்கள் - அன்னமய கோசம். எட்டு ராகங்களும் மூன்று குணங்களும் - பிராணமய, மனோமய கோசங்கள், வித்யா, அவித்யா இவற்றைக் கடப்பது. எனவே பதினெட்டு தத்துவங்களையும் கடந்தால் ஸ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பொருள். மேலும் பதினெட்டு படி என்பது பதினெட்டு சித்தர்களையும் தேவதைகளையும் குறிப்பதாகவும் ஒரு ஐதீகமும் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப்பூஜையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள்

**கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.**

கற்பு என்பது ஆடவருக்கும், மகளிருக்கும் பொதுவாம். ஆடவரது கற்பை நல்லொழுக்கமென்று கூறுவர். சிறப்பாக மகளிர் ஒழுக்கத்தையே கற்பென்று பண்டைக் காலந்தொட்டு ஆன்றோர் வழங்கி வருகின்றனர். ஈண்டு மாதர்களது ஒழுக்கத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

கற்பிக்கப்படுவது கற்பு எனப்படும். அது: தாய், தந்தையரால், உபாத்தியாயரால், மாமி, மாமாமார்களால், கணவனால் கற்றுக் கொடுக்கப்படுவதாம். அவ் ஒழுக்கத்தினின்றும் வழுவாமையில் இருப்பதே பெண்களது கடமை. இல்வாழ்க்கைத் துணையாக இருந்து அற மார்க்கத்திற்கு உதவி செய்வது பெண்களேயாம். ஆடவர்களுக்கு மகிழ்ச்சி, புகழ், செல்வம், பெருமை, முத்தி முதலிய சகல சௌபாக்கியங்களும் உண்டாவது பெண்களாலேயே.

ஓர் ஆடவனுக்கு, கற்புடைய மனைவி அருகில் இருப்பாளேயாயின் அவனால் முடியாத காரியம் மூவுலகத்திலும் இல்லை. ஒருகாலத்தில் விந்த பருவதமானது செருக்குற்று நிமிர்ந்தபோது அதன் செருக்கை அடக்கவெண்ணி தேவர்கள் யாவரும் செந்தமிழ்க் குரவராகிய அகத்திய முனிவர்பால் அணுகித் தங்கள் குறையை விண்ணப்பம் புரியுங்கால் கற்பின் சிறந்த உலோபா முத்திரை என்னும் பனிதையர் திலகம் தங்கள்பால் இருப்பதனால் மாதவராகிய தாங்கள் மனதில் நினைத்தால் முடித்தற்கரிய கருமம் எதுதான் உள்ளது? என்று பொழிந்தார்.

செயிரில் கற்பின் றிகழ்மனிக் குன்றனை
மயிலன்னாணின் மனைக்குரியானெனி
லுயரருந்தவ வுன்றனுளத்திடை
முயலிலேது முடித்தற்கரியதே

ஒருவனது இல்வாழ்க்கையானது உயர்ந்த வீடு, நிறைந்த செல்வம், கணக்கற்ற பணியாட்கள் முதலிய சிறப்புகள் பல இருப்பினும் மாட்சிமை அடையாது. நற்குண, நற்செய்கை பூண்ட பத்தினி இருந்தால்தான் மாட்சிமை அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைமாட்சி இல்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனை மாட்சித் தாயினு மில்.

- உத்தரவேதம் -

ஒருவன் எத்தனை பாக்கியவீனனாக இருப்பினும், மாண்புடைய மனைவி மட்டும் இருப்பாளேயாயின் அவனைக் காட்டிலும் பாக்கியவான் உலகிற் கிடையாது. ஒருவன் எல்லாப் பாக்கியங்களும் உடையவனாக இருந்தும் நற்குண நங்கையை மட்டும் அடையானேயாயின் அவனே துர்ப்பாக்கியன்.

இல்லத்தே னில்லவன் மாண்பானா லுள்ளதே
னில்லவன் மாணாக் கடை

- உத்தரவேதம் -

உயிருக்கும் உடலுக்கும் பரஸ்பரம் நட்பு இருந்து வருகின்றது. உயிரைவிட்டு உடல் இராது. உடலை விட்டு உயிர் இராது. உயிரை உடல் விரும்புகிறது. உடலை உயிர் விரும்புகிறது. உயிரால் உடல் பயனடைகிறது. உடலால் உயிர் பயனடைகிறது. எனவே நாயகன் உயிர் நாயகி உடல். நாயகன், நாயகி என்கிற இருவருக்கும் பரஸ்பரம் அன்பும் ஆதரவும் இருத்தல் வேண்டும். உண்மைக் காதலன் காதலியைவிட்டு பிரிந்திரான். உண்மைக் காதலனை காதலி விட்டுப் பிரிந்திராள். நாயகன் நாயகியை விரும்ப வேண்டும். நாயகி நாயகனை விரும்ப வேண்டும். நாயகனால் நாயகி பயன் பெறுகிறாள். நாயகியால் நாயகன் பயன் பெறுகிறான். ஆதலால் பெண்கள் நாயகனுடன் உயிருடன் உடம்புபோல ஒருமித்து வாழவேண்டும்.

இல்வாழ்க்கையில் சகல பொறுப்பும் மகளிரிடத்தே அமைந்திருக்கிறது. இல்லறம் என்கிற மாளிகையானது மாதர் என்கிற கடைக்காலின் மீது நிற்கிறது. கடைக்கால் கெட்டுவிட்டால் மாளிகை நிற்காதல்லவா? மாதர்கள் தமது கடமையினின்றும் தவறுவார்களேயாயின் இல்வாழ்க்கையின் மாட்சிமையே கிடையாது.

பெண்கள் நாயகன் துயிலின்றும் எழுவதற்கு முன் எழுந்து கைகால், முகங்களைத் தூய்மை செய்து தனது நாயகனைக் கடவுளாக நினைத்து பக்தியுடன் பதியின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்க வேண்டும். நாயகன் உணவுக்கு வந்தபோது, அன்புடன் அருகிலிருந்து உபசரித்து அன்னை மகனுக்கு அன்னம் ஊட்டுவதுபோல் பரிவுடன் உணவளித்து நாயகன் உண்டபின் தாம் உண்ணுதல் வேண்டும். இரவு காலத்தில் தனது கரத்தால் படுக்கை விரித்து நாயகனை அப்படுக்கையில் துயிலுமாறு செய்து, அவன் துயின்ற பின் தாம் துயில வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுக னுண்டபின் தானுகர் கொள்கையும்
விழிதுயின்றபின் துஞ்சலு மென்றுயி
லெழுதன் முன்ன மெழுதலு மேயன்றோ
பழுதிற் கற்புடைப் பாவையர் செய்கையே

- காசி காண்டம் -

பக்தியிற் சிறந்த பாவலன் தான் படித்த படிப்பின் திறமையனைத்தினையும் தான் வழிபடும் பரமனுக்குப் பரத்துவஞ் சூட்டுவதிலேயே உபயோகப் படுவதுபோல் நாயகியானவள், தனது அழகினை முழுதும் நாயகனுக்கே உபயோகப்படுத்த வேண்டும். ஈஸ்வரனை அடைவதற்கென்றே எப்படிக் கற்பிக்கப்படுகின்றதோ அப்படியே பெண்கள் தங்கள் உயிருக்குயிராகிய நாயகன் கண்டு களிக்கவே நல்ல ஆடை, அழகிய ஆபரணம், மலர் இவைகளால் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும். நாயகன் பிரிந்திடில் நல்லுடை தவிர்த்து ஆபரண அலங்காரமின்றி நாயகன் வருமளவும் அவனையே நினைத்திருத்தல் வேண்டும்.

''நாளல்லா நாள் பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு''

- மூதுரை -

பெண்களுக்கு உயிரினும் சிறந்ததாக ஓம்பப்படும் சிறந்த விரதம் பதிவிரதம். பதிவிரதம் என்றால் கணவனைக் கடவுளாக நினைத்து பக்தி செய்வது என்று பொருள் படும். இந்த விரதத்தை எந்தப் பெண் அனுஷ்டிக்கிறாளோ, அந்தப் பெண்மணியைக் காணச் சப்த நதிகளும் தெய்வங்களும் வரும். இந்த மாது சிரோன்மணியின் திருவடி எவ்விடத்தில் படுகிறதோ அந்த இடம்தான் ஷேத்திரங்கள் எல்லாவற்றிலும் சிறந்த ஷேத்திரம்.

கண்ணு கற்புடை கங்கையர் சீரடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றஃ
தெண்ணுகின்ற நலங்க ளெவற்றிலும்
புண்ணியத்தல மென்று புகல்வரால்

- காசி காண்டம் -

நாயகன் ஒரு சமயத்தில் அநாவசியமாகச் சினந்து வந்தாலும் கற்புடைய மாதர் நாயகன் மீது கோபியாமலும், எதிர் நின்று தகுதியற்ற வார்த்தைகளைப் பேசாமலும் பொறுமையுடன் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மூதாட்டி

# ஒளவையின்

# அருள்வாக்கு



## மூதுரை

### காப்பு

வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலரான்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

**வாக்கு உண்டாம** - பேச்சுத் திறமை உண்டாகும்; **நல்ல மனம் உண்டாம்** - நல்ல சிந்தனை தோன்றும்; **மாமலரான** - மாண்பு மிக்க தாமரையில் வீற்றிருக்கும் திருமகளது; **நோக்கு உண்டாம** - அருள் பார்வை ஏற்படும்; **மேனி நுடங்காது** - நோய் வந்து உடலை வருத்தாது; **துப்பு ஆர்** - பவளம்போல சிவந்த; **திருமேனி** - மேனியும்; **தும்பிக்கையான்** - தும்பிக்கையும் உடைய விநாயகரது; **பாதம்** - திருவடிகளை; **தப்பாது** - நாள் தவறாமல்; **பூக்கொண்டு** - மலர்கொண்டு; **சார்வார் தமக்கு** - வழிபடுவோருக்கு.

பேச்சுத்திறமை உண்டாகும்; கற்பனை பெருகும்; ஆரோக்கிய வாழ்வு உண்டாகும்; எவருக்கு? விநாயகரது திருவடிகளைச் சிந்திப்பவருக்கு; மலர்கொண்டு வழிபடுகிறவர்களுக்கு.

நாள் தோறும் விநாயகக் கடவுளின் திருவடிகளை வழிபடுகிறவர்களுக்கு நல்ல வாக்கு உண்டாகும்.

1. நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்?' எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நின்று** -- நிலைபெற்று; **தளரா** -- சோர்வு அடையாமல்; **வளர்** -- வளர்கின்ற; **தெங்கு** -- தென்னை மரம்; **தாள் உண்ட** -- வேர் மூலம் குடித்த; **நீரை** -- தண்ணீரை; **தலையாலே** -- தலையிலே காய்க்கும் இளநீர் உருவில்; **தருதலால**- கொடுப்பதால்; **ஒருவர்க்கு** -- ஒருவருக்கு; **நன்றி செய்தக்கால்** -- நல்லது செய்யும்போது; **அந்நன்றி** -- அந்த நல்ல உதவிக்கு; **என்று** -- எப்போது; **தருங்கொல** -- பிரதி உபகாரம் செய்வாரோ என்று; **என வேண்டா** -- எண்ண வேண்டாம்.

தென்னை மரம் இருக்கிறது; நீர் ஊற்றி வளர்க்கிறோம். நீர் எங்கே ஊற்றுகிறோம்? வேரிலே. ஊற்றிய நீர் என்னாகிறது? தலையிலே வருகிறது. எப்படி வருகிறது? சுவையுள்ள இளநீராக வருகிறது. அதுபோல ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கும் நன்மையே விளையும். இது உறுதி. "இவருக்கு உதவினால் நமக்கு நலன் வருமா? எப்போது வரும்?" என்று யோசிப்பது கூடாது. நன்மை செய்ய வேண்டும். அவ்வளவுதான். பலன் தானே கிடைக்கும். அதை எதிர்பார்த்துச் செய்யக் கூடாது.

நல்லவனுக்கு உதவி செய்தால் அது வீணாகாது. நன்றியுடன் பிரதியுபகாரம் செய்வான்.

உ. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே — அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

**நல்லார்** -- நல்ல குணம் உள்ளர்; **ஒருவர்க்குச்** -- ஒருவருக்கு; **செய்த உபகாரம்** -- செய்த உதவி; **கல்மேல** -- கல்லிலே செதுக்கப்பட்ட; **எழுத்துப் போல்** -- எழுத்தைப் போல்; **காணுமே** -- என்றும் நிலைத்திருக்கும்; **அல்லாத** -- நல்ல குணமில்லாத; **ஈரமில்லா** -- இரக்கமில்லாத; **நெஞ்சத்தார்க்கு** -- உள்ளமுடையவருக்கு; **ஈந்த** -- செய்த; **உபகாரம்** -- நல்ல காரியம்; **நீர் மேல** -- நீரிலே; **எழுத்துக்கு** -- எழுதப்பட்ட எழுத்துக்கு; **நேர்** -- ஒப்பு ஆகும்.

"உதவி செய்ய வேண்டும். பலனைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது" என்றார் முன்பாட்டிலே. உதவி செய்ய வேண்டும் என்றால் யாருக்கு? உலகத்திலே உதவி வேண்டாதார் எவர்? நல்லாரும் வேண்டுகின்றனர். பொல்லாரும் வேண்டுகின்றர். எளிய மனமுடையாரும் வேண்டுகின்றனர். வன்கணாளரும் வேண்டுகினறனர். எவருக்கு உதவுவது?

அது உன் விருப்பம். எவர்க்கு வேண்டுமானாலும் உதவி செய்யலாம். நல்லவருக்கு உதவி செய்தால் அது நலம் தரும்; என்றும் நிலைத்திருக்கும். எது போல? கல்லிலே செதுக்கிய எழுத்துப் போல. தீயவருக்கு உதவி செய்தால் அது அந்த நிமிடமே உபயோகமற்றதாகும். எது போல? நீரிலே எழுதுவது போல. நீரிலே எழுதினால் நிலைக்குமா? தெரியுமா? படிக்க முடியுமா? அந்த எழுத்து எவர்க்காவது பயன் தருமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்க்குச் செய்யும் உதவி கல்லில் செதுக்கிய எழுத்துப்போல நிலைத்திருக்கும். தீயவருக்குச் செய்யும் உதவியினால் ஒன்றும் பயன் இல்லை.

3. இன்னா இளமை வறுமை வந்து எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் – – இன்னாத
நாளல்லா நாள் பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்கு அழகு.

**இளமை** -- இளமைப் பருவத்தில்; **வறுமை வந்து எய்தியக்கால்** -- வறுமை ஏற்படுமானால்; **இன்னா** -- மிகவும் துன்பமாக இருக்கும்; **இன்னா அளவில்** -- துன்பம் தரும் முதுமையிலே; **இனியவும்** -- இன்பம் தரும் பொருள் பெற்றால்; **இன்னாத** -- அதுவும் துன்பமே; **நாள் அல்லா நாள் பூத்த** -- காலம் அல்லாத காலத்தில் மலர்ந்த; **நன்மலரும் போலுமே** -- நல்ல பூவினைப் போன்றது; **ஆளில்லா** -- கணவன் இல்லாத; **மங்கைக்கு** -- பெண்ணுக்கு; **அழகு** -- அழகு.

இளமைப் பருவம் இருக்கிறதே, அது இன்பமாக இருக்க வேண்டிய பருவம். அப்போது வறுமை வந்து வாட்டினால் மகிழ்ச்சி எங்கிருந்து வரும். வராது. துன்பமே உண்டாகும். முதுமைப் பருவம் இருக்கிறதே, அது வாழ்வில் கடைசிக் காலம். வாழ்ந்து அலுத்துச் சலித்துப் போயிருக்கும் காலம். அப்போது வேண்டிய செல்வங்கள் எல்லாம் குவிந்து என்ன பயன்? அனுபவிக்க முடியுமா? முடியாது. அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்கம்தான் உண்டாகும்.

மனதிலே மகிழ்ச்சி ஏற்படாது. துன்பமே உண்டாகும். எதுபோல? காலம் அல்லாக் காலத்தில் மலர்கள் பூத்தால் எப்படியிருக்கும்? அதை எவர் விரும்பி சூடுவார்? மலரால் எவர்க்கு பயன்? கணவனை இழந்த மங்கை மேலும் மேலும் அழகு பெற்று என்ன பயன்? எல்லாம் துன்பம் தருவனவே,

இளமையில் வறுமை வந்தால் துன்பம். முதுமையில் சுகபோகங்கள் கிடைத்தாலும் துன்பமே.

4. அட்டாலும் பால்சுவையிற் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லர் – – நண்பு அல்லார்
கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

**பால்** -- பாலை; **அட்டாலும்** -- நன்றாகக் காய்ச்சினாலும்; **சுவையில் குன்றாது** -- சுவை குன்றாது; **சங்கு** -- சுண்ணாம்புக் கிளிஞ்சலை; **சுட்டாலும்** -- காளவாயிலிட்டுச் சுட்டாலும்; **வெண்மை தரும்** -- வெண்மையான நீறாகும்.; (அவை போல) **மேன் மக்கள்** -- உயர் பண்புள்ள மேலோர்; **கெட்டாலும்** -- வறுமை வந்து தாழ்ந்தாலும்; **மேன் மக்களே** -- உயர் பண்புடனே விளங்குவர்; **நண்பு அல்லார்** -- நட்பின் பெருமை அறியாதவர்கள்; **அளவளாய்** -- நன்றாகப் பழகி; **நட்டாலும்** -- சிநேகிதமாக இருப்பினும்; **நண்பல்லர்** - நண்பர் ஆகமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் இருக்கிறது. அதை நாம் என்ன செய்கிறோம்? கொதிக்க வைக்கிறோம். நெருப்பிலே வைத்துக் காய்ச்சுகிறோம். ஏதடா நம்மைக் காய்ச்சுகிறானே! என்று அது சுவை குறைந்து போகிறதா? இல்லை. நன்றாகச் சுவை தருகிறது. சங்கு இருக்கிறது. அதை என்ன செய்கிறார்கள்? காளவாயில் போட்டுச் சுடுகிறார்கள். சுடுகிறார்களே என்று அது கருமையாகி விடுகிறதா? இல்லை. மேலும் வெண்மை தருகிறது. சுண்ணாம்பாகிறது. உயர்ந்த பண்புள்ளவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். எவ்வளவுதான் கெடுதல் செய்தாலும் பதிலுக்குத் தீமை செய்யார். நன்மையே செய்வர். இவர்களே நண்பர்கள். உயர் பண்பில்லாதவரோ நெருங்கிப் பழகுவர்! ஆனால் நண்பர் அல்லர். ஏன்? வஞ்சனையும் தீமையுமே அவர் உள்ளத்தில் இருக்கும்.

எவ்வளவுதான் பாலைக் காய்ச்சினாலும், பால் தன் சுவை குன்றாது. அதிகரிக்கும். சங்கு சுட்டாலும் வெண்மை தரும். அதுபோல வறுமையுற்றாலும் மேன்மை பொருந்தியவர் மேலும் பெருந்தன்மையுடன் இருப்பர். இழிந்தோர் அவ்விதம் இருக்க மாட்டார்.

5. அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

**தொடுத்த** -- கிளைகள் உள்ள; **உருவத்தால் நீண்ட** -- வானோங்கிய; **உயர் மரங்கள் எல்லாம்** -- உயர்ந்த மரங்கள் எல்லாம்; **பருவத்தால் அன்றி** -- உரிய பருவகாலம் வந்தால் அல்லாது; **பழா** -- பழந்தரமாட்டா. அதுபோல, **எடுத்த கருமங்கள்** -- மேற்கொண்ட காரியங்கள்; **அடுத்து முயன்றாலும்** -- அடுத்தடுத்து முயற்சி செய்தாலும்; **ஆகும் நாள் அன்றி** -- கைகூடும் காலத்தில் அல்லாது; **ஆகா** -- கைகூடிவராது.

நல்ல பழங்களைக் கொடுக்கும் மரங்கள் இருக்கின்றன. அவை எப்போது பழம் தரும்? நாம் விரும்பும் போது தருமா? தரா; அந்தப் பருவம் வரும்போதுதான் பயன் தரும். அதேபோல் எடுத்த காரியம் எப்போது கைகூடி வரும்? காலம் வரும்போதுதான். எவ்வளவுதான் முயன்றாலும் உரிய காலத்தில்தான் அது நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத விஷேசம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை 1ம் திகதி | (14-04-2006) | வெள்ளி | விய வருஷப் பிறப்பு |
| " 4ம் திகதி | (17-04-2006) | திங்கள் | சங்கடஹரசதுர்த்தி |
| " 8ம் திகதி | (21-04-2006) | வெள்ளி | நடேசர் அபிஷேகம் |
| " 11ம் திகதி | (24-04-2006) | திங்கள் | ஏகாதசி விரதம் |
| " 12ம் திகதி | (25-04-2006) | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| " 14ம் திகதி | (27-04-2006) | வியாழன் | அமாவாசை விரதம் |
| " 15ம் திகதி | (28-04-2006) | வெள்ளி | சித்திரைப் பரணி |
| " 16ம் திகதி | (29-04-2006) | சனி | கார்த்திகை விரதம் |
| " 17ம் திகதி | (30-04-2006) | ஞாயிறு | பரசுராம ஜயந்தி |
| " 18ம் திகதி | (01-05-2006) | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| " 20ம் திகதி | (03-05-2006) | புதன் | ஷஷ்டி விரதம் |
| " 24ம் திகதி | (07-05-2006) | ஞாயிறு | அக்கினி நாள் ஆரம்பம் |
| " 26ம் திகதி | (09-05-2006) | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| " 27ம் திகதி | (10-05-2006) | புதன் | பிரதோஷ விரதம் |
| " 28ம் திகதி | (11-05-2006) | வியாழன் | சித்திரைச் சித்திரை<br>சித்திரா பௌர்ணமி |
| " 29ம் திகதி | (12-05-2006) | வெள்ளி | சித்திரகுப்த விரதம்<br>அர்த்த நாரீஸ்வர விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி ஞானாமிர்தம்

## வினா - விடை

1. வினா: ஆகமங்கள் எத்தனை? உப-ஆகமங்கள் எத்தனை?

விடை: ஆகமங்கள் 28, உப-ஆகமங்கள் 207

2. வினா: 28 ஆகமங்கள், 207 உப-ஆகமங்கள் இவற்றின் பெயர்களைத் தருக.

விடை:

| ஆகமங்கள் | உப-ஆகமங்கள் |
|---|---|
| 1. காமிகம்: | வக்தாரம், பைரவோத்தரம், நாராசிமம் 3 |
| 2. யோகஜம்: | தாரம், வீணாசி, கோத்ரம், ஆத்மயோகம், சந்தம் 5 |
| 3. சிந்தியாகமம்: | சுசிந்தியம், சுபகம், வாமம், பாபநாசம், பரோத்பவம், அமிர்தம் 6 |
| 4. காரணாகமம்: | பாவனம், மாரணம், தௌர்க்கம், மாஹேந்திரம், பீமஸம்ஹிதா, காரணம், வித்வேஷம் 7 |
| 5. அஜிதம்: | ப்ரபூதம், ப்ரோத்பூதம், பார்வதி ஸம்ஹிதா பத்மஸம்ஹிதா 5 |
| 6. தீப்தாகமம்: | அமேயம், அப்த்தம், ஆச்சாத்யம், அசங்கியம், அமிருதௌஜஸம், ஆனந்தம், மாதவோத்பூதம், அற்புதம், அக்ஷயம் |
| 7. சூக்ஷமம்: | உபாகமமும் சூக்ஷமம் என்ற ஒன்றே. |
| 8. ஸஹஸ்ராகமம்: | அதீதம், மங்களம், சுத்தம், அப்ரமேயம், ஜாதிபாக், பிரபுத்தம், விபுதம், ஹஸ்த்தம், அலங்காரம், சுபோதம். |
| 9. அம்சுமான்: | வித்யா புராண தந்திரம், வாஸவம், நீல லோஹிதம், ப்ரகரணம், பூத தந்திரம், ஆத்மாலங்காரம், காச்யபம், கௌதம், ஐந்திரம், பிராம்மம், வாசிஷ்டம், ஈசானோத்தரம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சுப்ரபேதம்: சுப்ரபேதம்

## ருத்ர பேதாகமங்கள்

11. விஜயம்: உத்பவம், ஸௌம்யம், அகோரம், ம்ருத்யு நாசனம், கௌபேரம், மஹா கோரம், விமலம், விஜயம் 8

12. நிச்வாஸம்: நிச்வாஸம், நிச்வாசேத்திரம், நிச்வாஸுகோதயம், நிச்வாஸநயனம், நிச்வாஸ காரிகா, நிச்வாஸகோரம், நிச்வாஸ குஹ்யம், மந்திர நிஸ்வாசம்.

13. ஸ்வாயம்புவம்: ப்ரஜாபதி மதம், பத்மம், நளினோத்பவம், ஆக்னேயம்

14. அனலம்: ஆக்னேயம்

15. வீரம்: ப்ரஸ்தரம், புல்லம், அமலம், ப்ரபோதகம், அமோகம், மோகஸ்மயம், சகடம், சகடாதிகம், பத்ரம், விலேகனம், வீரம், ஹலம், போதகம்.

16. ரௌரவம்: காலாக்கியம், காலதகனம், ரௌரவம், ரௌவரோத்தரம், மஹா காலமதம், ஐந்தரம்.

17. மகுடம்: மகுடம், மகுடோத்தரம்.

18. விமலம்: ஆனந்தம், போகம், ஆக்ராந்தம், வ்ருஷருஷ பிங்கம், வ்ருஷோதரம், வ்ருஷோத்யூகம், ரௌத்ரம், ஸுதந்தம், தாரணம், அரேவதம், அரிக்ராந்தம், அஷ்டஹாஸம், பத்ரவிதம், அர்ச்சிதம்.

19. சந்திர ஞானம்: ஸ்ஸதிரம், ஸ்தானு, மஹாநந்தம், வாருணம், நந்திகேஸ்வரம், ஏகபாதபுராணம், சாங்கரம், நீலருத்ரம், சிவபத்ரம், கல்பபேதம், ஸ்ரீமுகம், சிவஸாஸனம், சிவசேகரம், தேவிமதம்.

20. முகபிம்பம்: சதுர்முகம், ஸம்ஸ்தோபம், ப்ரதிபிம்பம், அயோகஜம், ஆத்மாலங்காரம், லாயவ்யம், தௌடிகம், தூடிநீரகம், குட்டிமம், துலாயோகம், காலாத்யயம், மஹா சௌரம், பட்டசேகரம், நைரிருதம், மஹா வித்யா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ப்ரோத்கீதம்: வாராஹம், கவசம், பாசபந்தம், பிங்களாமதம், அங்குசம், தண்டதரம், தனுர்த்தரம், சிவஞானம், விக்ஞானம், ஸ்ரீ காலஞானம், ஆயுர்வேதம், தனுர்வேதம், ஸர்ப்பதம் ஷட்ர, விபேதனம், கீதகம், பரதம், ஆதோத்யம்.

22. லலிதம்: லலிதம், லலிதோத்ரம், கௌமாரம்.

23. ஸித்தம்: ஸாரோத்தரம், ஔசனஸம், சாலாபேதம், சசிமண்டலம்.

24. ஸந்தானம்: லிங்காத்யக்ஷம், கராத்யக்ஷம், அமரேச்வரம், சங்கரம், அஸங்க்யம், அநிலம், த்வந்தம்.

25. சர்வோக்தம்: சிவ தர்மோத்தரம், வாயுப்ரோக்த்தம், திவ்யப்ரோக்தம், ஈசானம், சர்வோத்கீதம்.

26. பராமேஸ்வரம்: மதங்கம், யக்ஷிணீபத்மம், பாரமேஸ்வரம், புஷ்கரம், சுப்ரயோகாம், ஹம்ஸம், சாமான்யம்.

27. கிரணம்: காருடம், நைருதம், நீலம்ருக்ஷம், பானுகம், தேனுகம், ப்ரபுத்தம். புத்தம், காலம்.

28. வாதுளம்: வாதுளம், உத்தார வாதுளம், காலஞானம், புரமோஹிதம், சர்வம், தர்மாத்மகம், ச்ரேஷ்டம், நித்யம், சுத்தம், மஹாகனம், விச்வம், வித்வாத்மகம்.

3. வினா: உருத்திராக்ஷம் எப்படித் தோன்றியது?

விடை: சிவபெருமான் திரிபுர தகனம் செய்யும்போது உடலிலிருந்து ஏற்பட்ட வியர்வை பூமியில் விழ அதிலிருந்து ஒரு விருக்ஷம் (மரம்) உண்டானது என்றும் அதுவே ருத்திராக்ஷ மரமாகும். இம்மரம் எனது அம்சமானது. இதன் காய்களை அணிபவர்களின் பாபங்களைப் போக்குகிறேன் என ஈசன் அருளியதாக பத்மபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

4. வினா: உருத்திராக்ஷ மணிக்கு நிறங்கள் உண்டா?

விடை: ஆம், வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு நிறங்கள் உண்டு. ஆயினும் அதிகப்படியாக விளைவது சிவப்பு கறுப்பு ருத்திராக்ஷங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வினா: உருத்திராக்ஷ மரங்கள் விளையும் இடங்கள் எவை?

விடை: ஹிமாலயம், ஜாவாத் தீவு, நேபாளம், ஆகிய இடங்களில் அதிகமாக விளைகிறது.

6. வினா: சிவ வழிபாட்டுக்கு ஜீவஸ்தானமாகவுள்ள மஹா மந்திரம் எது?

விடை: நமசிவாய எனும் பஞ்சாக்ஷரமாகும்.

7. வினா: பஞ்சாக்ஷரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?

விடை: பஞ்சாக்ஷரம் ஐந்து வகைப்படும் அவையாவன:

1. ஸ்தூல பஞ்சாக்ஷரம் - (நமசிவாய)
2. சூக்ஷம பஞ்சாக்ஷரம் - (சிவாயநம)
3. காரண பஞ்சாக்ஷரம் - (சிவாய சிவ)
4. மஹா காரண பஞ்சாக்ஷரம் - (சிவ)
5. மஹா மனு பஞ்சாக்ஷரம் - (சி)

8. வினா: உபதேச வாயிலாக அறியப்பட வேண்டிய பஞ்சாக்ஷரத்தின் விளக்கம் என்ன?

விடை: சிகாரம் - சிவம் நகாரம் - திரோதம்
வகாரம் - அருள் மகாரம் - மலம்
யகாரம் - ஆன்மா

9. வினா: நமசிவாய என்னும் மஹா மந்திரத்தில் 'நம' எனும் பதம் எதனைக் குறிக்கும்?

விடை: 'நம' எனும் பதம் பசுவையும்
'சி' எனும் பதம் பதியையும்
'வய' எனும் பதம் பாசத்தையும் குறிக்கும்.

10. வினா: "நமசிவாய" எனும் பஞ்சாட்சரத்தினுள் சகல தத்துவங்களும் அடங்கியுள்ளன என்பதனை சிவவாக்கியர் எவ்வாறு பாடினார்?

விடை: சிவாய வெனும் அக்ஷரம் சிவனிருக்கும் அக்ஷரம்
உபாயமென்று நம்புவோர்க்கு உண்மையான அக்ஷரம்
கபாடமிட்ட வாயுவைக் கடந்து போகும் வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாய என்றெழுத்துமே!!

11. வினா: பஞ்சாக்ஷரத்தின் சிறப்பை பல பாடல்களில் பாடியவர் யார்?

விடை: திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வினா: சம்பந்தர் பாடிய பஞ்சாக்ஷர சிறப்பு அடங்கிய பாடல் வரிகள் எவை?

விடை: 1. வேதம் நான்கிலும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

2. சிந்தும் வல்வினை செல்வமும் மல்குபால்
நந்தி நாமம் நமசிவாயவே

3. நம்பன் நாமம் நமசிவாயவே

4. நல்லார் நாமம் நமசிவாயவே

நாவுக்கரசு சுவாமிகள்

1. நற்றுணையாவது நமசிவாயவே

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

1. நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா
நமசிவாயவே

மாணிக்கவாசக சுவாமிகள்

1. நமச்சிவாய வாழ்க என்று பாடியார்

13. வினா: தமிழ் மூதாட்டி ஔவை தமது நல்வழியில் நமசிவாய சிறப்பை எவ்வாறு கூறுகின்றார்?

விடை: 'சிவாயநம' என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை.

14. வினா: திருக்குறள் தந்த வள்ளுவர் ஐந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரத்தின் சிறப்பை எவ்வாறு குறிப்பிட்டார்?

விடை: சிறப்பு வனப்பு யாப்பு நடப்பு மறைப்போடு உறக்காண்பர் 'ஐந்தெழுத்தினுள்'

15. வினா: திருமந்திரம் பாடிய திருமூலர் ஐந்தெழுத்தின் பெருமையை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?

விடை: ஐம்ப தெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்துப் போய் அஞ்செழுத்தாமே!

(ஐந்து எழுத்தில் ஐம்பதெழுத்தும் அடங்கும் என்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக மலர்)



## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுட் காலம் | 1000.00 |
| ஆண்டுச் சந்தா | 300.00 |
| தனிப்பிரதி | 25.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா | U. S. $ 50 |


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Tel: 2393436, 0722 422239


*Printed by: Anush Printers Col-11. Tel: 0777 244893*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org